★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

2020 நவம்பர் 3 செவ்வாய்க்கிழமை

வரு. 88 இல. 261 | November 03,Tuesday, 2020 | 16 பக்கங்கள் | 30/-







குடும்பத்துக்கு 5,000 ரூபாவுடன் 10,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய பொருட்கள்

## பாதிப்புக்குள்ளான மக்களுக்கு அரசின் நிவாரண உதவிகள்

### பொருளாதார மறுசீரமைப்பு, வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி தீர்மானம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் தகுதியுள்ள மக்களுக்கு இம்முறையும் 5000 ரூபா கொடுப்பனவை வழங்குவதற்கு பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி தீர்மானித்துள்ளது.

வைரஸ் தொற்று நோயாளிகளின் நெருக்கமானவர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில் அத்தகைய குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி ஜனாதிபதி செயலணியின் தலைவர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

06





## கொரோனா விரைவாக உலகை விட்டகல பிரார்த்தனை செய்க

சர்வதேச இந்துமத குருபீட ஸ்ரீ ஜயப்பதாஸ குருக்கள்

03

## இரு வாரங்களில் அரசாங்க பாடசாலைகளை திறக்க முடிவு

### கல்வி அமைச்சின் செயலாளர்

**எம். எஸ். பாஹிம்**

அரசாங்க பாடசாலைகள் மூன்றாம் தவணைக்காக இன்னும் இருவாரங்களில்

…ுள் …மச் …யர் …தரி …ட்ட

படி மூன்றாவது தவணைக்காகப் பாடசாலைகளை 09 ஆம் திகதி மீண்டும் திறக்க முடியாத நிலையுள்ளதால் இன்னும் இரு வாரங்களில் திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா தொற்று அச்சம் காரணமாகப் பாடசாலைகள் ஆரம்பிப்பது தொடர்பில் ஆழமான ஆய்வு மேற்கொண்ட பிறகே இந்தத் தீர்மானம்

06







## மக்கள் தொடர்ந்தும் சுகாதா… பாதுகாப்பை பின்பற்ற வேண்டு…

### ஹட்டனில் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

**ஹட்டன் சுழற்சி நிருபர்**

"ஹட்டனில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 10 தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டனர். 80 பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் 'நெகடிவ்' என வெளிவந்துள்ளன. இது மகிழ்ச்சியளிக்கின்றது. எனினும்,



மக்கள் தொடர்ந்தும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றவேண்டும்" என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

புரட்டொப் வீதியை புனரமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் (2) கலந்துகொண்டு

06

…லுள்ள இலங்கையர்களின் நில அபகரிப்பு குறித்து விசாரணை நடத்த சட்டமா அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அரசியல் ரீதியாக செல்வாக்குமிக்க ஒரு குழுவால் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் நிலங்கள் வலுக்கட்டாயமாகப் பறிமுதல் செய்த சம்பவம் குறித்து உடனடியாக



மாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பொலிஸ் கண்காணிப்பாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்காணிகள் போலி பத்திரம் தயாரித்து விற்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சி.சி.டி.வி காட்சிகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட

06

## பாராளுமன்றம் இன்றைய தினம் இரண்டு மணி நேரம் மட்டுமே கூடும்

### மருத்துவ சட்டத்தின் கீழ் இரு புதிய நிபந்தனைகள் முன்வைப்பு

பாராளுமன்றம் இன்று இரண்டு மணிநேரம் மட்டுமே கூடவுள்ளது. இதன்போது சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் இரண்டு புதிய விதிமுறைகளை முன்வைப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இன்று காலை 10.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை மட்டுமே பாராளுமன்றம் கூடும் என்றும் இதன்போது சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் இரண்டு

06

அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க வசதியாக

## ஊரடங்கு காலத்தில் நடமாடும் வர்த்தகர்களுக்கான விசேட அனுமதி

ஊரடங்கு காலப்பகுதியில் இதற்கு முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு அத்தியாவசிய பொருட்களை நடமாடும் சேவையின் மூலம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா



அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் மார்ச் முதல் மே, ஜூன் மாதங்களில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக அந்தந்த பகுதிகளில் உள்ள கிராம உத்தியோகத்தர்,

06

## தமிழக முதல்வரை சந்திப்பதன் மூலம் மீனவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி



### தெருச்சண்டை போல தொடர அனுமதிக்க முடியாது - டக்ளஸ்

இலங்கை, இந்திய மீனவர்கள் இடையே ஏற்படும் பிரச்சினையை நிரந்தரமாக தீர்ப்பதற்கு ஏதுவாக தமிழக முதல்வரை சந்தித்து தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமை அலுவலகத்தில்

06



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இன்று;

## இறுதிக்கட்ட பிரசாரத்தில் நேற்று ட்ரம்ப், ஜோ பிடன்

அமெரிக்காவில் இன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இந் நிலையில், ஜனாதிபதி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் மற்றும் ஜோ பிடன் ஆகிய இருவரும் நேற்று இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

06





தலைவரே, கொரோனா நிவாரணம் வழங்க இந்த முறை பெருசா ஒரு இடமும் ஏன் போகல?.....

திருகோணமலையில்

## வைத்தியர் ஒருவருக்கு கொரோனா உறுதி

திருகோணமலை பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியரொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் பணிப்…



## 20ஐ ஆதரித்தமைக்கான வியூகங்கள் விரைவில் சமூக நலன்களாக வெளிவரும்

### வீண் விமர்சகர்களின் வாய்கள் அடைக்கப்படும் என்கிறார் நசீர் அஹமட்

எதையும் நிபந்தனையாக குறிப்பிடாமல், எழுமாந்தமாக இருபதை ஆதரித்ததாக சிலர் எம்மை விமர்சிக்கின்றனர். பேரினவாதத்தின் விழிப்புக்கு மத்தியில் முஸ்லிம் சமூகம் சார்ந்த சில நலன்களை வியூகத்தின் வடிவிலே சாதிக்க வேண்டியுள்ளது. இதனால்தான் இன்று வரைக்…



## உள்ளூர் உற்பத்தி முகக்கவசங்கள் அமைச்சர் பந்துலவிடம் கையளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் உட்பட வைரஸ்களை உடலில் புகாமல் தடுக்கும் வகையிலான நவீன முகக்…

